No. of Printed Pages : 8

**3601**

பதிவு எண் | | | | | | |

308243

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் VI-க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து** வரிகளில் விடை எழுதுக. **4x2=8**

1. எட்டுத் தொகை நூல்கள் யாவை?

2. எளியவும் அரியவும் ஆவன யாவை?

3. தேம்பாவணி - பொருள் கூறுக.

4. 'உலா' என்பதன் பொருளை விளக்குக.

5. குழந்தைத் தொழிலாளர்கள் ஏன் கண்ணாமூச்சி ஆட இயலவில்லை?

6. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களைக் குறிப்பிடுக.

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக. **3x4=12**

7. வரதநஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார்?

8. நரிவெரூஉத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.

9. அறிவின் இலக்கணத்தை எழுதுக.

10. கண்ணகியைக் கண்ட ஊரவர் திகைத்துக் கூறியன யாவை?

11. 'மறப்பரிது நும்நன்றி' - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக. **3x4=12**

12. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. சுவடிச்சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை?

15. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார்?

16. நயினார் பதத்துணையை நாவில் வைத்துப் போற்றுபவர் அடையத்தக்கனவாக உமறுப்புலவர் கூறுவன யாவை?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை எழுதுக. **1x8=8**

17. பொறையுடைமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் தரும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

18. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை விளக்கி எழுதுக.

19. 'காடு' என்ற தலைப்பின் கீழ்க் கவிஞரேறு வாணிதாசன் உரைப்பனவற்றை எழுதுக.

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4x1=4

20. ''யாரு மில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ''
(அ) இச்செய்யுளடி இடம் பெற்றுள்ள நூல் எது?
(ஆ) இச்செய்யுளின் ஆசிரியர் யார்?
(இ) இது யார் கூற்று?
(ஈ) 'கள்வன்'- யார்?

அல்லது

21. பசிக் கயிற்றில்
பம்பரமாகி விட்டவர்கள்
பம்பரம் சுற்றுவதெங்கே?
(அ) இப்பாடலின் ஆசிரியர் யார்?
(ஆ) இப்பாடல் இடம் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு எது?
(இ) பம்பரம் என்று குறிப்பிடுவது யாரை?
(ஈ) பசிக்கயிறு - இதன் இலக்கணக் குறிப்புத் தருக.

VI. 22. ''வெல்லை''- எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் 'பா' வகையையும் குறிப்பிடுக. 4+2=6

23. ''எப்பொருள்' எனத் தொடங்கும் திருக்குறளையும் ''கெடும்'' என முடியும் திருக்குறளையும் அடிபிறழாமல் எழுதுக. 2+2=4

VII. 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2+2=4
(அ) இறைஞ்சி
(ஆ) வைத்தல்
(இ) செய்க
(ஈ) வந்தனன்
(உ) வேண்டேன்
(ஊ) அசைத்த

25. பின்வரும் கீழ்க்கோடிட்ட தொடர்களுள் மூன்றனுக்குக் இலக்கணக் குறிப்பு எழுதுக. 3x2=6

(அ) பருஉம் நெறியுமார்

(ஆ) காலத்தினாற் செய்த

(இ) மொய்கழல்

(ஈ) மாமதிப் பிஞ்சு

(உ) விண்ணிலும் மண்ணிலும்

(ஊ) கடும்பகை

26. எவையேனும் இரண்டு தொடர்களுக்கு புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) பகலுறை

(ஆ) பூங்கொடியாள்

(இ) பெண்ணரசு

(ஈ) இருட்கடல்

(உ) வெண்ணெய்

(ஊ) செருக்கெழ

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

குறிஞ்சி திணை அல்லது பொருண்மொழிக் காஞ்சித்துறை

28. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல 1x4=4

தன்றே மறப்பது நன்று - இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

அல்லது

உவமையணி அல்லது தற்குறிப்பேற்ற அணியைச் சான்று தந்து விளக்குக.

VIII. பொருத்துக. 4x1=4

| | திணை | | உரிப்பொருள் |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | - | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 30. | முல்லை | - | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| 31. | மருதம் | - | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 32. | நெய்தல் | - | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| | | - | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16x1=16

33. முத்தமிழிலும், ஓவியக் கலையிலும் வல்லவர்

(அ) பாரதியார்

(ஆ) பாரதிதாசன்

(இ) நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

34. அகநானூற்றின் ஒற்றைப்படை எண்களாக வருவன :

(அ) குறிஞ்சித் திணைப் பாடல்கள்

(ஆ) பாலைத் திணைப் பாடல்கள்

(இ) முல்லைத் திணைப் பாடல்கள்

35. ஐங்குறுநூற்றின் பாடல்கள் எண்ணிக்கை

(அ) 500

(ஆ) 100

(இ) 400

36. நற்றிணைப் பாக்களின் அடி வரையறை

(அ) 13 அடி முதல் 31 அடி வரை

(ஆ) 9 அடிமுதல் 12 அடி வரை

(இ) 4 அடிமுதல் 8 அடி வரை

37. அறத்துப்பாலில் உள்ள இயல்களின் எண்ணிக்கை :

(அ) 4

(ஆ) 3

(இ) 2

[ திருப்புக

38. திருவள்ளுவர் பிறந்த ஆண்டாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(அ) கி.பி. 31

(ஆ) கி.மு. 31

(இ) கி.மு. 18

39. தமிழின் முதல் காப்பிய நூல்

(அ) சிலப்பதிகாரம்

(ஆ) மணிமேகலை

(இ) சீவக சிந்தாமணி

40. வரமிகு கம்பன் சொன்ன வண்ணம்

(அ) 86

(ஆ) 96

(இ) 106

41. வீரமாமுனிவர் திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தது.

(அ) அறத்துப்பால், காமத்துப்பால்

(ஆ) பொருட்பால், காமத்துப்பால்

(இ) அறத்துப்பால், பொருட்பால்

42. ''தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை'' - என்று பாடியவர்.

(அ) பாவேந்தர் பாரதிதாசன்

(ஆ) கவிஞர் இரசூல் கம்சதோவ்

(இ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

43. பிரபந்தம் தொண்ணூற்றாறு என்று கூறியவர்

(அ) வீரமாமுனிவர்

(ஆ) ஜி.யூ. போப்

(இ) கம்பர்

44. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்

(அ) மதுரைக் கலம்பகம்

(ஆ) காசிக் கலம்பகம்

(இ) நந்திக் கலம்பகம்

45. 'பாரதி' என்ற சொல்லின் பொருள்

(அ) கவிஞர்

(ஆ) கலைமகள்

(இ) வித்துவான்

46. நல்லாசிரியருக்கான 'டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது' பெற்றவர்

(அ) தாரா பாரதி

(ஆ) கவிக்கோ அப்துல் ரகுமான்

(இ) ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

47. சுந்தரர் 'தேவாரம்'

(அ) முதலாம் திருமுறை

(ஆ) ஏழாம் திருமுறை

(இ) பன்னிரெண்டாம் திருமுறை

48. 'மணிமேகலை' என்னும் நூல்

(அ) புத்த சமயக் காப்பியம்

(ஆ) சைவ சமயக் காப்பியம்

(இ) சமண சமயக் காப்பியம்

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. 2×2=4

49. செய்யாமற் _________ உதவிக்கு வையகமும்
வானகமும் _________ அரிது.

50. எதிரதாக் காக்கும் _________ கில்லை
அதிர _________ நோய்.

- o 0 o -